ஸ்ரீ சாரதா சதங்கை, மணி - 4

கல்வி இம்மை பயக்கும்! நம்மை விளக்கும்!!

ஸ்ரீ

நீலி பராக்கிரமம்

அல்லது

வேளாளர் தீக்குளித்தல்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

விலை அரையணா

எழுதியது

கல்வி இம்மை பயக்கும்! நம்மை விளக்கும்!!

பழையனூர் நீலி கதை

அல்லது

வேளாளர் தீக்குளித்தல்

1. முன்னுரை

சத்தியமே சரதம், வாய்மையே விரதம், மெய்யே பூஷணம்! ஆனதுபற்றியே, அரிச்சந்திரன் தன் தேவியை விற்றான்; அரிய மைந்தனை விலைக்கு மாறினான்; தானும் அடிமையாகி மயானங் காத்தான். இஃது முன் யுகத்தில் நடந்த கதை. இக் கலியுகத்திலோ, பழையனூர் வேளாளர் ஓர் எழுபதின்மர் தீயில் குளித்தனர்; தேகம் விடுத்தனர், தேவர் ஆயினர்; தேசும் எய்தினர், அந்த அருங் கதையினை இங்கே சுருங்கச் சொல்வோம்.

முத்தி தரும் நகரங்கள் ஏழாம். அவை, காசி, காஞ்சி, மதுரை, மாயை, அயோத்தி, அவந்தி, துவாரகை எனப் படும். அந்த ஏழினும் சிறந்தது காஞ்சியே. ஏனெனில், சைவர் வைணவர் இருவருக்கும் காஞ்சி பொதுவானது. ஆதியிலே தமிழகம் பலநாடுகளாக வகுக்கப்பட்டிருந்தது. அவை சேர, சோழ, பாண்டிய, தொண்டை, கொங்கு, நாடுகளாம். தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சியே. முன்னாளில் சைவ, வைணவ, புத்த, ஜயின சமயங்களின் தாயகமாய் இருந்தது அக் காஞ்சிமா நகரம். அந்நகரின் பழஞ்சிறப்பை அறிவிக்கும் அறிகுறிகள் இன்றும் அங்கே அனந்தம் உள.

டம் யாது? இந்த ஆடவன் தவறி நடந்தானே? வேறு யாதோ? விரைவில் விளம்புக! ஆறுதல் அளிப்போம், நியாயமும் வழங்குவோம்," என்று அம்பலத்தார் பரம கனிவுடன் கூறினர்.

4. நீலியின் பசப்பு

உடனே நீலிப்பேய் உரைக்கும்:— "பெருமக்காள்! இவர் என் கணவர். மாலையிட்ட நாள்முதலா என்னை இவர் கவனிப்பது இல்லை. கணிகையின் மோகத்தில் இவர் கட்டுண்டு கிடக்கின்றார்; என்னை அழைத்துவந்து நடுக்காட்டில் விட்டேகப் பார்த்தார்;வெட்டி எறியவும் முயன்றார். பெண் பாலான என்னை இக்கோலம் காணலாமோ? என் வயிற்றுப் பிழைப்பு ஒருபுறம் கிடக்கட்டும். என் வாழ்வு என்னுவது? ஆயுள் அளவும் நான் வாழ்வின்றித் திரியவே வேதன் விதித்தானே? விலைமகள் மோகம் எத்தனை நாள் நிலைக்கும்? கையில் காசு இருக்கும் வரையில்தானே? கையிலே கரும்பு இருக்க, இவர் ஏன் வேம்பு தேடித் திரிகிறார்? கொண்டான் குறிப்பறிந்து நடக்க, நான் தவறவில்லை; என்னைக் கைவிடல் ஆகுமோ? எத்துணையோ மன்றாடிப் பார்த்தேன், மண்டியிட்டும் கேட்டேன். இவர் இணங்கவில்லை; மனமும் திரும்பவில்லை. எனது பச்சைப் பாலனே கஞ்சி கஞ்சி என்று கத்துகின்றான். அப்பா எங்கே, அப்பா எங்கே, என்று அலறுகின்றான்; என் செய்வேன்? எனக்கு வாழ்வளித்தல் உங்கள் பொறுப்பு. என்னைக் கவனிப்பார் யாரும் இலர். தாயும் இல்லை, தந்தையும் இல்லை. தன்னந்தனியே நின்று தமியேன் தவிக்கின்றேன்."

அங்ஙனம் பேய்மகள் பேசி விம்மி விம்மி அழுதனள்; விழுந்தும் புலம்பினள். அம்பலத்தார் அவளைத் தேற்றி, வணிகனை நோக்கி, முகாந்தரம் கேட்டனர். அவனோ, "ஐயன்மீர்! இவள் பேய்மகள்! இவள் வார்த்தை எல்லாம் பொய்க் கூற்று. நடிப்போ பேய்க்கூத்தாம்; வேறில்லை. என் மனைவி காஞ்சியில் இருக்கின்றாள். இஃது சத்தியம், சத்தியம்," என்று சாற்றினன். இருவர் வாய்மொழியையும் வேளாளர் காதுகொடுத்துக் கேட்டனர். அவர்களுக்கு உண்மை புலப்படவில்லை! ஒன்றும் தோன்ற

வில்லை. முடிவில் அம்பலத்தார் அந்நீலியை நோக்கி, "நங்காய்! உங்கள் இருவரில் யாவர் சொல்லை நாங்கள் நம்புவது? உனது உரைக்கு அத்தாட்சி உளதோ? உளதாயின் ஒரு முடிவு சொல்லலாம்," என்றனர்.

பேய்மகள் "பெரியோரே! பெண் என்றால் பேயும் இரங்கும். உங்கள் மனம் இரங்கவில்லையோ? இளகவில்லையோ? குதிரை தூக்கிப் போட்டதும் அல்லாமல், குளமும் பறித்தது என்பார்கள். அங்ஙனமே, இவர் என்னைக் கைவிட்டதும் அல்லாமல், என்னைப் பேய் என்றும் கூசாமல் பேசுகின்றார். பொதுமகளின் மயக்கில் ஆழ்ந்து கிடப்போர், அருமை மனைவியைப் பேயென்று மட்டுமா பேசுவர்? பூதம் என்பர், பிடாரி என்பர், பிசாசு என்பர், பட்டப்பகலில் படுகொலை புரியவும் பார்ப்பர். இவர் அங்ஙனமே செய்ய முயன்றாரே; முன் ஜன்மத்தில் நான் என்ன பாவம் செய்தேனோ? யாரை வஞ்சித்தேனோ? இப்பிறப்பில், கொண்ட கணவன் என்னைக் கைவிடுகிறார்; தூற்றுகிறார்; உயிரை வாங்கவும் உன்னுகிறார். நீங்களோ என் வாய்மொழிக்கு அத்தாட்சி கேட்கிறீர்கள். இப்பச்சைப் பாலனை விட வேறு அத்தாட்சி வேண்டுமோ?" என்று சொல்லி, ஒக்கலை விட்டு அக்குழந்தையை இறக்கினள். குழந்தையோ மெள்ள மெள்ளத் தவழ்ந்து சென்று, அப்பா, அப்பா என்று கூவிக்கொண்டு, சுதரிசனச் செட்டியின் இருகால்களையும் கட்டிக் கொண்டு கதறியது.

வணிகன், அது கண்டு திடுக்கிட்டான். பின்பு அம்பலத்தாரை நோக்கி, "சபையோரே! பேயின் சாகஸம் பேசப்போமோ? வரும் வழியிலே கள்ளிக் கட்டை ஒன்றைக்கொண்டு, இக்குழந்தையை ஆக்கினது இப்பேய். அதுவும் வந்து என் காலைக் கட்டிக்கொள்கின்றது. இஃதே முக்காலும் உண்மை. இவள் பேய்மகளே! என் மனைவி அல்லள்," என்று புகன்று நடுங்கினன். செட்டிப்பிள்ளையின் வார்த்தையில் வேளாள மக்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. பேயின் வாசகமோ மிகப் பொருத்தமாகக் காணப்பட்டது. உடனே அவர்கள் "அப்பனே! இன்றிரவு நீ இப்பெண்ணுடன் தாமதிப்பின், உன் மனக்கசப்பு மாறும், இருவருக்கும் நேசம் பிறக்கும்; மறுதினம் நாம்

பேசிக்கொள்ளலாம்," என்று சொன்னார்கள். சுதரிசனன், "அந்தோ! பேயுடனா நான் இன்றிரவு இருத்தல் வேண்டும்? என் உயிரைப் பருகிவிடுமே," என்று பதைத்தான்.

அதற்கு அவர்கள், "செட்டியாரே! சிறிதும் அஞ்ச வேண்டாம். இவள் பேயாயின், நாங்கள் பிணை ஆவோம்," என்றனர். மீண்டும் அவன் பதை பதைத்து நின்றான். அது கேட்டு "சுதரிசன! உனக்கு ஓர் ஊறும் நேராது. இன்று இரவு இம்மடத்தின் அறையில் நீவிர் இருவரும் தங்கியிரும்; உன் உயிருக்கு ஆபத்து நேரின், எங்கள் எழுபதின்மர் உயிரையும் ஒருங்கே கொடுப்போம்," என்று அம்பலத்தார் உரைத்தனர். பின்னர் அவர்களின் ஆணைக்கிணங்க, இருவருக்கும் இன்னடிசில் பரிமாறப் பட்டது. இருவரும் உண்டு ஓர் அறைக்குள் சென்றனர். வேளாளர் அக் கதவை வெளிப்புறம் பூட்டி, சாவியை எடுத்துக்கொண்டு தம் தம் வீடு சேர்ந்தனர் சிறிது ஆறுதலுடன்.

நீலியோ ஆர்வமுடன் வணிகனை உள்ளே இட்டுச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்; பழிவாங்கச் சமயம் வாய்த்தது என்று பெரிதும் களித்தாள்; சுருங்கச் சொல்லின், வணிகனது உயிரைக் கவர்ந்து, குடரைப் பிடுங்கி மாலை போட்டுக்கொண்டு அப்பேய் மறைந்து போயிற்று. மறுதினம் அதிகாலையில் வேளாளர் வந்து, கதவைத் திறந்து பார்த்தனர். வணிகனது சவமே தென்பட்டது. பெண்ணையும் காணோம், குழந்தையையும் காணோம். உடனே எழுபதின்மரும் ஒன்று கூடினர். "நம் வார்த்தையை நம்பி அச்செட்டி மகன் மாண்டு போயினனே," என்று கலங்கினர்; பேய்க் கூத்தை அறியாமல், பிறழ்ந்தோமே என்றும் வருந்தினர். முடிவில் சொன்ன சொல் தவறுவண்ணம், தீக்குளித்தல் வேண்டும் என்று அவர்கள் அனைவரும் தீர்மானம் கொண்டார்கள்.

5. தீக்குளி

உள்ள விஷயம் ஊரெங்கும் பறந்தது. ஊரார் அனைவரும் ஒருங்கே வந்து அம்பலத்தில் கூடினர்; ஓர் உயிருக்காக எழுபது உயிரைப் பறிகொடுப்பதா என்று புலம்பினர்; அறியாமல் செய்த பிழைக்கு வேறு பரிகாரம் இல்

லையோ, என்று கதறினர். பல சொல்லிப் பயனென்ன ? பழைய னூரிலே அம்பலத்துக்கு எதிரில் பிரமாண்டமான அக்கினி குண்டம் வளர்க்கப்பட்டது. எழுபதின்மரில் ஒருவர் நீங்கலாக அனைவரும் அக்குண்டத்தை மும்முறை வலம் வந்தனர்: முன்னவனைத் தொழுதனர்; புறம் தூய்மை நீரால் அமையும், அகத் தூய்மையோ வாய்மையினால் ஆகும்; வாய்மையைக் காக்கக் கருதியே அரிச்சந்திர மகாராஜன் அந்நாளில் தன் பதியை யிழந்தான், பாலனை யிழந்தான், படைத்த நிதி இழந்தான்; வாய்மையினால் கிடைக்கும் விழுமிய கதியை இழக்க நேரினும், கட்டுரை தவறேன் என்று கௌசிக முனிவருக்குக் கழன்றான். எனவே நாமும் நமது வாய்மையைக் காக்க ஆவி துறத்தல் வேண்டும், வேறு வழியில்லை,” என்று கூறி, அத் தீயில் குளித்தனர் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து.

அந்த எழுபதின்மரில் ஒருவன் அச்சமயம் ஆங்கில்லை. அவன் தனது கழனிகளை உழச்சென் றிருந்தான். நீலியோ அவன் மனையாளின் உருக்கொண்டது; வயல் சென்று அவ் வேளாளனைக் கண்டது; கண்டு, ஏனையோர் தீக்குளித்த செய்தியை உரைத்தது; பின்பு, “நீர் மட்டும் உயிர் வாழ விரும்புவீரோ? வேளாண் மகனுக்குக் கொழுவன்றோ சமயத்தில் ஆயுதம் ஆகும்,” என்று எடுத்துரைத்தது. அங்ஙனம் அப் பேய் புகன்று வாய்மூடு முன்னம், உழுகலப்பையின் கொழுவைக்கொண்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டான் அக் குலமகன். இதனை,

> விழுவேன் எனச் சென்று வீழ்ந்தாரில்
> ஓர் மைந்தன் வேறுபட,
> உழுவேலியில் சென்று ஒரு நீலி
> முன்கை உடையவற்குக்
> கொழுவே படைக்கலம் என்று
> சொலாமுனம், கூறிய சொல்
> வழுவேயெனப் பொன்று வல்லாளனும்
> தொண்டை மண்டலமே.

என்று படிக்காசுப்புலவர் புகழ்ந்து பாடி யிருக்கிறார். இனி, அத் தீக்குழியோ பல தினங்கள் வரையில் அவியா

மல் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருந்தது. அய லகத்தார் அனைவரும் அது கேட்டு வந்து, வியப்பும் துய ரும் ஒருங்கே கொண்டு, அக்கினி குண்டத்தை வலம்வந்து வணங்கித் தொழுதனர். தமிழ் வேந்தர் மூவருக்கும் தூது வர் மூலம் அச் செய்தி எட்டிற்று.

6. மூவேந்தர் புகழுரை

சேர, சோழ, பாண்டியரான மூவேந்தரும் பதைத்து வந்து, அக்கினி குண்டத்தைக் கண்டு அதிசயமும் அதி துயரும் கொண்டு, அதனை மும்முறை வலம்வந்து, மெய்ம் மறந்து, வேளாண் மக்களை வியந்து வாழ்த்தினர்; அப்பால், சற்றே தெளிந்து அவர்கள் பாடிய பாக்கள் இவை:-

யாவரே காராளர்! யாவர் இணை ஆவார்?
நாவலோ! நாவலோ! நாவலோ!—கோவைப்
பொருப்பால் அளந்தார்க்குப் போதுமே உண்மை
நெருப்பால் அமைத்தார்க்கு நேர்! (சேரன்)

எல்லை பலகடந்திட்டு எங்கும் புகழ் பூத்துத்
தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே —கொல்லை
வழியில் ஒரு பேய் நின்று வஞ்சனையால் செய்த
குழியில் எழு செந்திக் கொழுந்து. (சோழன்)

பிழைத்தாரோ காராளர்! பேய்மகள் சொற்கேட்டுப்
பிழைத்தார்கள் அல்லர், பிழைதீர்த்தார்—பிழைத்
எல்லாரும் காண எரியகத்தே மூழ்கினர் [தார்கள்
எல்லாரும் இன்றும் உளர்! (பாண்டியன்)

இல்லாள் இன்றேல் இல்லறம் இல்லை. இல்லாள் நல்லா ளாக இருத்தல்வேண்டும். அவள் நல்லாள் ஆயின், நன்மை பலவும் கிட்டும். ஆனால் தாரமும் குருவும் வாய்த்தல் தலை விதி என்பர். எனினும், நன்மதியாள ஒருவனே தனது இல்லாளை நல்லாளாக ஆக்கி வாழ்தல் கூடும். எத்தகைய புத்திமான் ஆயினும், இரண்டு மனையாளைக் கொள்ளுதல் கூடாது. கொள்ளின், இல்வாழ்க்கை செவ்வனே நடை பெறுதல் அருமையாம். இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாடுவான் என்பது பழமொழி. ஒருத்தியைத் திரு

ப்தி செய்தலே கடினம். இருவரை எங்ஙனம் திருப்தி செய்யமுடியும்? ஸ்ரீ கிருஷ்ணனும் இரு மனைவியரைத் திருப்தி செய்யக் கூடவில்லை. உருக்குமணி, சத்தியபாமை இருவரும் பிரமாதமாகப் பிணங்கி நின்றனர். இஃதே புராணங்களின் போதனை. கடவுள் அம்சமான கண்ணனே கலங்கினன் எனில், மானிடர் எம்மாத்திரம்?

விதேகன் இருமனைவியர் கொண்டான். ஒருத்திமீதே அவன் உயரிய காதல் பூண்டான்; மற்றொருத்தி மீதோ வெறுப்புக் கொண்டான். ஆதலினால் ஒருத்தியை அவன் கொலை புரிய நேர்ந்தது. ஒருத்தியையே மணந்திருப்பின், அந்நிலை நேர்ந்திராது. இனி, விதி வலி யாரை விட்டது? முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும் என்றாள் ஔவை. அன்றியும் வினையின் பயனே வேதனிலும் வலிமையுடையது. "பேய் திரிகின்றது, ஆதலின் போகவேண்டாம்," என்று ஊரார் சொல்லினர். அதனை அச் செட்டிமகன் கேட்கவில்லை. மதி தவறி அவன் வழி நடந்தான். நவஞானியின் ஆவேசம் அவனைக் குழுக்கிட்டது. பின்னரே அவன் மதி கொண்டான்; மயக்கமும் எய்தினன். அம்பலத்தாரிடம் அவன் முறையிட்டுக்கொண்டும் பயன் இல்லாது போயிற்று. நீலிப்பேயோ அத்தாட்சி காட்டி வாதாடியது. அம்பலத்தார் அப்பேய்க் கூற்றையே நம்பினர்; செட்டியையும் நீலியையும் ஓர் அறையில் இருக்கச் செய்தனர். அவனது ஊட்டியைத் திருகி, உள்ளங்களித்து அப்பேய் சென்றது. ஊழின் பெருவலி ஒன்று உளதோ?

7 உயிர் வழங்கல்

அந்த எழுபது வேளாளர் தமது ஆருயிரைக்கொடுத்து சொன்னசொல்லைக் காத்தனர். அன்னார் முன்சன்மத்தில் அறியாமல் ஒரு பிழைசெய்தனர். அனதுபற்றி, மறுபிறப்பில் அன்னவர் அனைவரும் ஆவி இழக்க நேரிட்டது. அறிந்து அறிந்து பாவம் செய்யின், அழுது அழுது அநுபவிக்க நேரும். அறியாமல் பாவம் புரியினும், அநுபவம் தப்பாது. பரீட்சித்து மகாராஜன் எவ்வளவோ முயன்றும், உயிர்தப்ப முடியவில்லை. அரவம் வந்து தீண்டும் என அம்மன்னவன் அஞ்சினன்; கடலின் நடுவே மண்டபம் கட்டி

வாழ்ந்தான். வாழ்ந்தும், வேதியன் தந்த எலுமிச்சங்கனி படவரவாக மாறி அந்த வேந்தன் உயிரை உண்டகன்றது. ஆதலின் தீவினை என்பதைக் கனவிலும் கருதல் ஒண்ணுமோ? கருதின், கலங்கித் தவிக்க நேரும்.

இது நிற்க, பழையனூர் வேளாண் மக்களோ சத்தியமே சரதம் என்று தீயில் குளித்தனர். உயிரை அவர்கள் ஒரு பொருட்படுத்தவில்லை; சொன்ன சொல்லையும் வாய்மையையுமே பெரிதாக எண்ணினர்கள். அவர்களின் பூதவுடல் அன்றே அழிந்துபோய் விட்டது. ஆயினும் அன்னவரின் புகழ் உடம்போ அழியவில்லை; இன்றும் நின்று நிலவுகின்றது! ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களின் புகழ் மங்கவில்லை. பெரியார் பலர் அன்னவரின் குணத்தைப் புகழ்ந்து பேசியுளர், பாமாலையும் தொடுத்துளர். அன்னர் தமக்கு மட்டும் அன்று, தமது வேளாண் குலத்துக்கும் புகழ்தேடி வைத்துப் போயினர்.

பொய்சொன்ன வாய்க்குப் போஜனம் கிட்டாது என்பர். முன்னளிலே தமிழகத்தில் வாய்மை பரவியிருந்தது; அதனல் நீர்வளமும் நிலவளமும் நிரம்பி நின்றன. பசிப்பிணி என்பது தலைகாட்டவில்லை. மக்கள் அனைவரும் சுகஜீவிகளாக வாழ்ந்துவந்தார்கள். இந்நாளிலோ, சத்தியம் முன்போல் தலைதூக்கி நிற்கவில்லை. அதனல் வறுமையும் பஞ்சமும் வாட்டுகின்றன; விளைவும் குறைந்துளது; வாழ்வில்லாச் சங்கடமும் தோன்றியுளது. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும். இஃது மேலோர் வாக்கு. சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதல் முதலில் கஷ்டமாகத் தோன்றும்; முடிவிலோ பேரின்பம், பெருமகிழ்ச்சி, அரும் புகழ் இவை கிட்டும். கஷ்டத்துக்குப் பின் சுகம் வாய்த்தல் இயற்கை. தாயினும் நல்ல தயை உடையோர் தமது உடலம் அழியினும் உயரிய செய்கை விடார். தமிழகமோ மீண்டும் தலைசிறக்க வேண்டும். இதற்கு மெய்ம்மையே ஆதாரம். ஆதலின் எங்கும் சத்தியம் ஓங்கிப் பரவி உயர்வு அளிக்குமாக!

யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(குறள்)

8. பாமாலே

நீலியின் வரலாறு மெய்யே ஆம். இதற்குச் சான்று கள் பல உள. திருஞான சம்பந்த சுவாமிகள் தமது தேவாரத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

வஞ்சம்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே!

இம்மட்டோ? சேக்கிழார் புரான ஆசிரியர் பெயர் உமாபதி சிவாசாரியர், இவர் தமது நூலில்,

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணி செஞ்சடைத் திருவாலங்காட்டு அப்பன்
அண்டமுள நிமிர்ந்து ஆடும் அடியின்கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்து அளவிட்டு இவளவு எனப் பேசலாமோ?

காசினி போற்றும் காரைக்கா லம்மையார் எனும் மாது சிரோமணி மகிழ்ந்து பாடியிருப்பது:—

கொங்கை திரங்கி நரம்பு எழுந்து
குண்டுகண் வெண்பல் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து இருபற்கள் நீண்டு
பாடுயர் நீள்கணைக்கால் ஓர் பெண்பேய்
தங்கு அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங்காடே!

பல ஆண்டுகளுக்கு முன்னே சுப்பிரதீபக் கவிராயர் என்பார் ஒருவர் இருந்தார். விறலிவிடுதூது என அவர் ஒரு நூல் பாடியுள்ளார். அந்நூலிலே பழையனூர் நீலி யைக் குறித்து அவர் பாடியிருப்பது:—

நடந்தைக் கேளீர் நடுக்காட்டில் நீலி
தொடர்ந்தாள்ஓர்செட்டிதனைச்சூதாய்-நடந்துஅவன்கைப்

பத்திரத்தால் தப்பிப் பழையனூர் அம்பலத்தில்
மொய்த்திருந்த வேளாளர்முன்சென்றாள்,சத்துருப்போல்
ஆலங்காட்டுப்பேய் அதோவருகுது, என்மனையாள்
கோலங்காட்டிப் பகட்டிக்கொண்டு என்றான், நீலி எனும்
கள்ளி முலைப்பாலும் கண்ணீரும் கால்கழுவக்
கள்ளியொன்றைப் பிள்ளையாக் கையேந்தி, மெள்ளவந்து
நாட்டிலே கண்டதுண்டோ? நல்லோரே! என்னை நடுக்
காட்டிலே விட்டார் கணவனார், மீட்டும் அவர்
கிட்டவந்தார், நான்பயந்து கெஞ்சிவந்தேன், வாளுருவி
வெட்டவந்தார், முன்னாள் விதிப்படியோ? முட்டமுட்டப்
பேய்என்றார்என்னை, இந்தப்பிள்ளை கள்ளிக் கொம்பு
தாயென்றார் இல்லை, தமரில்லை-தாயவரே! [என்றார்
[illegible]ட்டவர்ன்முலைக்கீழ்ப்பிள்ளையை விட்டால் அதுதான்
ஆர்கிட்டப் போம் என்று அறியலாம்-பாரும் என
விட்டாள் சபையில், அதுமெள்ளத் தவழ்ந்து மடி
தொட்டேறச் செட்டி துணுக்குற்றான், ஒட்டாரம் [என்
பண்ணுகிறான் செட்டியென்றார் பார்த்தவர்எல்லாம்அவள்
கண்ஆணை, நீலி என்றான் கால்நடுங்கிப்-பெண் அலது
சத்துருப்பேயாகிச் சதிசெய்தால், நாங்கள் உனக்கு
இத்தனைபேரும் பழிகாண் என்றுரைத்துப் - பத்திரத்தை
வாங்கி வணிகனையும் மார்க்கமிட்ட நீலியையும்
பாங்கில் ஒருவீட்டில் படுக்கவைத்துத் தூங்கும் எனப்
பூட்டிக் கதவடைத்துப் போயினார், பேய்மதியோர்
வாட்டமுள்ள நீலி பழி வாச்சுது என்றே-ஊட்டி
பிடித்தாள். வணிகன் பிடரிதனைக் கையால்
ஒடித்தாள், களித்தாள், உதிரம் குடித்தாள், பின்
நீண்டாள், பிளந்து எறிந்தாள், நெஞ்சில் குடர்மாலை
பூண்டாள், எழுந்தாள்,பொருள் வணிகன்-மாண்டதற்பின்
கண்டார் வழக்கை, எந்தக் கற்பனையால் சற்பனைகள்
விண்டாலும் பெண்வார்த்தை மெய்யாம் காண்!

9. நீலி பராக்கிரமம்

மாதராரிலே ஒரு சிலர் மாய அழுகை கோள்வர்; திடீ
ரென்று கண்ணீரும் வடிப்பர். அத்தகையோரை நோக்கி
நீலித்தனம் பண்ணாதே என்பர் நம் பெரியோர். நீலிக்கு

திராட்சாசு

உயர்ந்த டானிக

உஷ்ணம் போக்கும்

குளிர்ச்சி தரும்

உற்சாகம் ஊட்டும்

களைப்பை நீக்கும்

மலச்சிக்கல் நீக்கும்

ஜீரணம் செய்யும்

நல்லபசி கொடுக்கும்

புஷ்டி தரும்

ஒரு புட்டி விலை ரூ. 1-4-0
தபால் சார்ஜ் வேறு.

ஜெனரல் யுடிலிடி கம்பெனி,
325, தம்புசெட்டி வீதி, சென்னை.